பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

17 07 2025 **THURSDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தூய்மை இந்தியா இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பங்கேற்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சியில் கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. முன்னாள் முதலமைச்சர் காமராஜர் குறித்து பொது வெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடைபெறுவது ஏற்புடையது அல்ல என்று முதலமைச்சர் திரு முக.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று பிஜேபி கூறியுள்ளது.

5. ஹங்கேரியில் நடைபெற்றுவரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sujeet** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

தூய்மை இந்தியா இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பங்கேற்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தூய்மை நகரங்களுக்கான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

உலகின் மிகப்பெரிய தூய்மை கணக்கெடுப்பு இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பள்ளிப்பாடத்தில் தூய்மைப்பணிகளின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இது தூய்மைப்பணிகளை மேற்கொள்வதில் பெரும் வெற்றியை தரும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சியில் கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று ஜெய்ப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அடுத்த 100 ஆண்டுகள் கூட்டுறவுத்துறைக்கானது என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களையும் திரு அமித் ஷா பட்டியலிட்டார்.

<<<<<<>>>>>

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேளாண் பல்கலைக்கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

இன்று பீகாரில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத்திட்டம் 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், செலவினங்களை குறைக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் இலக்காக உள்ளது என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வேளாண் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விளையாட்டு மக்கள் இயக்கமாக உருவாக வேண்டியதன் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்

இன்று புதுதில்லியில் விளையாட்டுத்துறை தொடர்பான மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மத்திய – மாநில அரசுகள் மற்றும் விளையாட்டு அமைப்புகள் ஒருங்கிணைந்து செயலாற்றினால் விளையாட்டு மக்கள் இயக்கமாக உருவெடுக்கும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<>>>>>

முன்னாள் முதலமைச்சர் காமராஜர் குறித்து பொது வெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடைபெறுவது ஏற்புடையது அல்ல என்று முதலமைச்சர் திரு முக..ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சமூக நீதியையும், மதசார்பற்ற நல்லிணக்கத்தையும் உருவாக்க வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர் காமராஜர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

காமராஜரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், இத்திட்டத்தினமூலம், ஒரு கோடியே 70 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் 100 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதையும் திரு நயினார் நாகேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் காவல்துறையின் செயல்பாடு முறையாக இல்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மன ரீதியிலான பயிற்சிகளும் காவல்துறையினருக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தமிழகத்தில் நிஃபா வைரஸ் பரவாமல் இருப்பதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் - (1) 50 Sec.)***

கடலோர பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த ஐந்து தினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் - (2) 26 Sec.)***

**<<<<<<>>>>>**

பள்ளி வேன் மீது ரயில் மோதி மூன்று மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ரயில்வே கேட்டை கடந்த 8-ஆம் தேதி கடக்க முயன்ற பள்ளி வேன் மீது, ரயில் மோதி நேரிட்ட இந்த விபத்து தொடர்பாக ரயில்வே வாரியத்தலைவர், தமிழக அரசின் தலைமைச்செயலர் மற்றும் காவல்துறை தலைவருக்கு அந்த ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

சேலம் அரசு தலைமை மருத்துவமனை, குழந்தைகள் உட்பட ஆறு பேருக்கு இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளது.

நவீன கருவிகளை பயன்படுத்தி மருத்துவர்கள் இருதய குறைபாட்டை சரி செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - விஜய்குமார் - 40 Sec.)***

காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், இந்த அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதாகவும், இது தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருந்தது என்றும் பயனாளிகள் தெரிவித்தனர்.

***(Sound byte - பயனாளிகள் - 32 Sec.)***

**<<<<<<>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

------------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

--------------------

சேலத்தில் தேங்காய் சுடும் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஹங்கேரியில் நடைபெற்றுவரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sujeet** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், அல்பேனியாவின் **Islam Dudaev**-ஐ வென்றார்.

-------------------

ஜெர்மனியில் நடைபெற்று வரும் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் **Benediction Rohit** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

------------

சர்வதேச கிரிக்கெட் குழுமத்தின் முதன்மை நிர்வாக குழு உறுப்பினர்களாக இந்தியாவின் குருமூர்த்தி பழனி மற்றும் அனுராக் பட்நாகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**<<<<<<END>>>>>**